பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆனி 27 (10—7—68) புதன் ★ வெளியூர்: ஆனி 28 (11—7—68) வியாழன் [இதழ்: 22

காங்கிரசை வீழ்த்தக் கூட்டு

பல்வேறு கட்சிகளுக்கிடையே தேர்தல் உடன்பாடு

உத்தரப் பிரதேசம், பீகார் மாநிலங்களில் காங்கிரசல்லாத கட்சிகள் முயற்சி

பாட்னு, ஜூலை 10—

வடநாட்டிலும், தமிழகத்தைப்போலவே காங்கிரசை முறியடிக்கப் பல்வேறு அரசியல் கட்சிகளும் சேர்ந்து தேர்தல் உடன்பாடு கண்டு, கூட்டணி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

காங்கிரசு அல்லாத அரசுகள் கவிழ்க்கப்பட்ட மாநிலங்களிலெல்லாம் இடைக்காலத் தேர்தல் நடைபெற விருப்பது தெரிந்ததே.

உத்தரப்பிரதேசத்தில் மூன்று கட்சிகள் சேர்ந்து கூட்டணி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் செய்தி ஏற்கனவே வெளியாகியுள்ளது. இப்போது பீகாரிலும் அதே போன்ற முயற்சி நடைபெறுகிறது.

"பீகாரில் நிலையான ஓர் அரசை நிறுவும் பொருட்டு, சனநாயகத்திலும், மதச் சார்பற்ற தன்மையிலும் நம்பிக்கை கொண்ட கட்சிகளின் மாநாடு ஒன்றினைக் கூட்டி தேர்தல் அறிக்கை தயாரிக்கவேண்டும்.

"நடைபெறவிருக்கும் இடைக்காலத் தேர்தலில் வெற்றி பெற்று நிலையான அரசை நிறுவ இது அவசியம்"

என்று பி. சோ. கட்சியின் மாநில அமைப்பு, பல்வேறு கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதற்கிடையில், கூட்டணியின் எல்லாக் கட்சிகளிலிருந்தும் விலகியவர்களும், சில சுயேச்சைகளும் சேர்ந்து அமைத்த சோஷித் தளம், வரும் தேர்தலில் மொத்தமுள்ள 318 இடங்களில் 250 இடங்களில் போட்டியிடுவது என்று யோசித்துக் கொண்டிருக்கின்றது.

நடைபெற்று முடிந்த சோஷித் தளக் கட்சியின் இரண்டு நாள் கூட்ட முடிவில், 12 உறுப்பினர்களைக் கொண்ட தேர்தல் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

அறிஞர் அண்ணு முயற்சியால் உடன்பாடு

பீடித்தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் நின்றது

வேலூர், ஜூலை 10—

வடாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 35,000 பீடித் தொழிலாளர்களின் 17 நாள் வேலைநிறுத்தம் நின்றுவிட்டது.

ஊதியம், வேலை நிலைமை குறித்து தொழிலாளருக்கும் — முதலாளிகளுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டுவிட்டது.

"முதலமைச்சர் அண்ணு அவர்களின் முயற்சியால் இந்த உடன்பாடு ஏற்பட்டது; பீடித் தொழிலாளருக்கு ஊதியக் குழு சிபாரிசு செய்த விகிதங்களில் ஊதியம் கிடைக்கும்"

என்று, த. நா. பீடித் தொழிலாளர் சங்கத் தலைவர் வி. கே. கே தண்டராமன் எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

மேற்கு ஜெர்மனியிடம் மேலும் ரூ. 47 கோடி

இந்தியா கடன் பெற ஏற்பாடு

புதுடில்லி, ஜூலை 10—

மேற்கு ஜெர்மன் அரசாங்கம் புதிதாக வழங்க முன்வந்துள்ள ரூ. 47 கோடிக் கடன் வசதியைப் பயன்படுத்துவது சம்பந்தமாக அந்த அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதற்காக இந்திய அரசின் நிதித் துறை கூட்டுச் செயலாளர் ஒய். டி. ஷா, ஜெர்மனிக்குச் சென்றுள்ளார்.

தொழில் வளர்ச்சியைத் தடுக்கும் 'சேனை'!

கௌகத்தி, ஜூலை 10—

"அசாம் மாநிலம் தொழில் மயமாவதைத் தடுத்து நிறுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பது அங்குள்ள லச்சித் சேனையாகும்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, மாநில அமைச்சரவைக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியதாகத் தெரியவருகிறது.

"மாநில அரசைப்போலவே மத்திய அரசும், 'அசாம் தொழில் மயமாக வேண்டும்' என்பதில் மிகவும் ஆர்வமுடன் இருக்கிறது; ஆனால் அதற்கான நல்ல சூழ்நிலையை மாநிலத்தில் உருவாக்க மாநில அரசு செயல்பட வேண்டும்" என்றும் அவர் அறிவுறுத்தியதாகத் தெரியவருகிறது.

பயர்மென்கள் வேலை நிறுத்தம்

புதுடில்லி, ஜூலை 10—

பயர்மென்கள் வேலைநிறுத்தத்தைத் திரும்பப் பெறுவதுபற்றி இரயில்வேத் துணையமைச்சர் திரு. பரிமள கோஷ்—தட்சிண இரயில்வே ஊழியர் சங்கத் துணைத் தலைவர் கே. அனந்த நம்பியார் ஆகியோர் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியடைந்துவிட்டது.

முன்னுள் மன்னர்கள் காங்கிரசுக்கு முழுக்கு?

இரு மத்திய அமைச்சர்களும் விலகிவிடுவர்?

புதுடில்லி, ஜூலை 10—

முன்னுள் மன்னர்களுக்கு அளித்துக்கொண்டு வரும் உதவிப் பணத்தையும், சலுகைகளையும் நிறுத்திவிட வேண்டும் என்று மத்திய அரசு கொள்கையளவில் முடிவு செய்திருப்பதைக் கண்டிக்கும் வகையில், நாடாளுமன்றக் காங்கிரசுக் கட்சியில் உள்ள முன்னுள் மன்னர்கள், 'காங்கிரசுக் கட்சியிலிருந்து இராஜினுமா செய்யலாமா' என்று யோசித்துக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

நாடாளுமன்றக் காங்கிரசுக் கட்சியில் 12-க்கு மேற்பட்ட முன்னுள் மன்னர்கள் உள்ளனர். இவர்களில் இருவர் அமைச்சர்களாகவும் உள்ளனர்.

அரசாங்கம் மன்னர்களின் உதவிப் பணத்தை நிறுத்திவிடப் போகிறது என்ற முடிவு வெளியானதைத் தொடர்ந்து, சூழ்நிலையை எப்படி அணுகுவது என்பது குறித்து, முன்னுள் மன்னர்கள் கலந்தாலோசித்து வருகின்றனர்.

தங்களிடம் அனுதாபம் உள்ள ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும், மற்றவர்களிடமும் அவர்கள் இது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றனர்.

உள்ளாட்சி மன்றங்களில் அரசியல் வேண்டாம்

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அறிவுரை

திண்டுக்கல், ஜூலை 10—

'சில இடங்களில் நகராட்சித் தலைவர்—உறுப்பினர்களுக்கிடையே தகராறு இருப்பதனுல் நல்ல காரியங்களைச் செய்ய முடியவில்லை.

"நகராட்சி மன்றங்களிலும், ஊராட்சி மன்றங்களிலும் அரசியல் என்பது கூடாது.

"சாலைகள் போடுவதிலும், 'இது காங்கிரசு ரோடு; அது, அந்தக் கட்சி ரோடு' என்ற நிலை கூடாது.

'சாலைகள் போடவேண்டும்; பூங்காக்கள் அமைக்க வேண்டும்; வானெலிக்கூடங்கள் ஏற்படுத்த வேண்டும்; சாக்கடைகள் போடவேண்டும்; மின்விளக்குகள் அமைக்கவேண்டும்' என்பதையே குறிக்கோளாகக் கொண்டு செயலாற்ற வேண்டும்; இதனையெல்லாம் செய்யத் தொண்டு உள்ளமும், கடமை உணர்ச்சியும் இருக்கவேண்டும்"

என்று கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், திண்டுக்கல் நகராட்சி சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் சுட்டிக்காட்டித் தெரிவித்தார்.

நகராட்சித் தலைவர் எஸ். எம். தனசாமி கூட்டத்துக்குத் தலைமை வகித்து அமைச்சருக்கு வரவேற்பு இதழை வாசித்துக் கொடுத்தார்.

நகராட்சி காங்கிரசு உறுப்பினர் கே. ஏ. வாசிமலை, அமைச்சருக்கு மலர்மாலை அணிவித்தார்.

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்த நகராட்சி 102 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இம்மாதிரியான நகர மன்றங்களில் எங்களை அழைப்பது உங்களின் நல்ல பல கருத்துக்களைத் தெரிந்துகொள்ளப் பயன்படுகிறது.

நகராட்சிக்கு என்னென்ன தேவை—என்னென்ன பிரச்சினை என்பதைக் காண்பதற்கு நூற்றுக்கணக்கான 'பைல்'களைப் புரட்டிப் பார்க்கவேண்டும்; ஆனால், இம்மாதிரி வரவேற்பில் 5 நிமிடங்களில் குறைகளைத் தெரிந்து கொண்டுவிடலாம்.

மத்திய அரசிலும் சரி—தமிழக அரசிலும் சரி—அவர்கள் போடும் எந்தத் திட்டங்களானுலும் சரி—எத்தனைக் கோடி ரூபாய் திட்டங்கள் போட்டாலும் சரி—அதை கட்டிக் காப்பது உங்களின் கடமையாகும்.

பல பிரச்சினைகளை ஏற்று நடத்துகின்ற பொறுப்பு நகராட்சியினுடையதாகும். அரசுத் திட்டங்களை நிறைவேற்ற எங்களுடைய பிரதிநிதிகளாக—எங்களுடைய ஏஜெண்டுகளாக இருந்து கண்காணித்து முறைப்படி செயல்படுத்த நீங்கள்தான் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும்."

துணைத் தலைவர் ஞா. முத்துலக்கையன் நன்றி கூறினுர்.

குடிசை இழந்தோருக்கு தீப்பிடிக்காத குடியிருப்பு

நகரில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன

மாநகராட்சிப் பொறுப்பில் அரசு ஒப்படைப்பு

சென்னை, ஜூலை 10

1967-ஆம் ஆண்டில் சென்னை நகரில் பெரும் அளவில் ஏற்பட்ட தீ விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களைக் குடியமர்த்துவதற்காக சென்னை மாநகராட்சி அஸ்பெஸ்டாஸ் ஷீட்டுகள் போட்ட 498 குடியிருப்புகளைக் கட்டியுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்க இவை தற்போது தயாராக உள்ளன.

இந்தக் குடியிருப்புகள் பத்திரிகரை, சிலேட்டர்புரம், சுண்ணும்புக் காள்வாய், இராசா முத்தையாபுரம், இராமகிருஷ்ணமடம் ரோடு, பிரகாச முதலித் தெரு ஆகிய பகுதிகளில் கட்டப்பட்டுள்ளன.

இந்தக் குடியிருப்பு ஒவ்வொன்றுக்கும் ரூ. 310 செலவானதாகத் தெரிகிறது.

இக்குடியிருப்புகளை ஒதுக்குதல்—எதிர்காலப் பராமரிப்பு—வாடகை வசூலித்தல் ஆகிய பொறுப்புக்களை மாநகராட்சியிடம் அரசு ஒப்படைத்துள்ளது.

மூன்றுபேர் கொண்ட குழு ஒன்று இந்த குடியிருப்புக்களை ஒதுக்கும். இக்குழுவில் இராம. அரங்கண்ணல், எம்.எல்.ஏ., வட்ட மாநகராட்சி உறுப்பினர், மாநகராட்சி ஆணையர் ஆகியோர் இடம் பெறுவர்.

இந்தக் குடியிருப்புகளுக்கு மாதம் ரூ. 4 வீதம் வாடகை வசூலிக்கப்படும். இவ்வாறு வசூலிக்கப்படும் வாடகைப் பணம் மாநகராட்சியின் நிதியில் சேர்க்கப்படும்.

இந்தக் குடியிருப்பின் பராமரிப்புச் செலவு முழுவதையும் மாநகராட்சியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்தக் குடியிருப்புக்களின் உரிமை பற்றி அரசு ஆலோசனை செய்து வருகிறது.

ஒரே இரவில் 53 கடைகள் சூறை!

காவல் நிலையத்திற்கு அருகிலேயே நடந்த கொள்ளை!

வடக்கே சட்டம் -- ஒழுங்கு காக்கப்படும் இலட்சணம்!

சூரத், ஜூலை 10—

ஒட்டுமொத்தமான சூறைக்கு சூரத்திலுள்ள பிலிமோரா எனும் பகுதி முதல் பரிசு பெற்றுவிட்டது!

அண்மையில் சர்தார் வல்லபாய் பட்டேல் அங்காடியில் ஒரே இரவில் 53 கடைகளின் பூட்டுகளை உடைத்துத் திருடர்கள் சூறையாடியதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இத்தனையும், போலீசு நிலையத்துக்கு 200 கெச தூரத்தில் நடந்திருக்கிறது!

திருடர்கள், கடைகளிலிருந்த பல பொருட்களையும், மிட்டாய், பிஸ்கட்டு முதலியவைகளையும் களவாடிச் சென்றனர்!

ஆசிரியர்-மாணவர்கட்கு நல்வாய்ப்பு

அறிவைப் பெருக்கிக்கொள்ள ஒலிபரப்பு நிகழ்ச்சிகள்

எல்லாப் பள்ளிகளுக்கும் வானொலி கிடைப்பதற்கு வழி

கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் வேண்டுகோள்

"இப்போது தமிழகத்தில் 1 000 உயர்நிலைப் பள்ளிகளிலும், 500 நடுத்தரப் பள்ளிகளிலும் மட்டுமே வானொலிப்பெட்டிகள் இருக்கின்றன; அந்தப் பள்ளிகளிலெல்லாம், வானொலி கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை மிக நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.

"வானொலிப் பெட்டிகள் இல்லாத உயர்நிலைப் பள்ளிகளும, நடுத்தரப் பள்ளிகளும் வானொலிப் பெட்டிகளைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வது--நலம் பயக்கும்.

"வானொலிப் பெட்டிகளை வாங்கிப் பள்ளிகளுக்கு நன்கொடையாக வழங்கும் பணியினை, பொதுமக்களும், கொடைச் சிந்தனையாளர்களும் ஆங்காங்கு முன்வர வேண்டுமென்று வேண்டி கேட்டுக்கொள்கிறேன்"

என்று கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 1938-ஆம் ஆண்டு முதல் சென்னை திருசசி வானொலி நிலையங்கள் நடசதிவரும் கல்வி ஒலிபரப்புகளைத் துவக்கிவைததுப் பேசுகையில் வேண்டுகோள் விடுததார்.

இந்த ஒலிபரப்புகளைத் துவக்கிவைத்து உரையாற்றிய அவர், அதன் விவரங்களை விளக்குகையில் குறிப்பிட்டதாவது :—

"கல்வி அறிவை வளர்க்கும் பற்றுக்கோடுகளில் வானொலி சிறந்த பற்றுக்கோடாக விளங்கிவருகிறது என்பது கண்கூடு.

கல்வி அறிவை வளர்க்க, 'நூல்' ஒவ்வொரு மாணவனுக்கும் பற்றுக்கோடாக விளங்குகிறது.

'ஆசிரியர்கள்' பல மாணவர்களுக்குப் பற்றுக்கோடாக விளங்குகிறார்கள்; 'வானொலி' எல்லா மாணவர்களுக்கும் பற்றுக்கோடாகத் திகழ்கிறது.

அப்படிப்பட்ட வானொலி மூலம் ஒலிபரப்பப்படும் கல்வி நிகழ்ச்சிகளைப் பயன்படுத்திக்கொள்ளத் தமிழகமெங்கணுமுள்ள ஆசிரியர்களும், மாணவர்களும் முன்வர வேண்டும்.

வானொலி மூலமாகக் கல்வி நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும் முயற்சி 1938-ஆம் ஆண்டுத் தொடங்கி வளர்ந்து வருகிறது.

மாணவர்கள் வகுப்பு அறையில் பெறக்கூடிய கல்விக்கு உறுதுணையாக இருக்கவும், மேலும் விரிவான முறையில் விளக்கம் கொடுக்கவும், பாடங்களை இயல் — இசை — நாடகம் மூலம் உணர்த்திக்காட்டவும் வானொலி கல்வி நிகழ்ச்சிகள் பெரிதும் பயன்படும்.

நேரில் காணமுடியாவிட்டாலும், காதால் கேட்டு மகிழ்ந்து பயன் தரத்தக்கவைகள் அனைத்தையும் பெற வானொலி பேருதவியாக விளங்கி வருகிறது.

வானொலியின் மூலம் பாடம் கேட்கும் முயற்சியினை மாணவர்கள் பெற்றுவிடுவார்களேயானல், மாணவர்களுக்குக் கல்வியில் ஒரு கவர்ச்சி ஏற்படவும், பொறுமையோடு கேட்டுக்கொண்டிருக்கும் பண்பு வளரவும், கேட்டதை நினைவுபடுத்திக் கொள்ளும் பயிற்சி ஏற்படவும், 'மேலும் மேலும் அறிந்து கொள்ள வேண்டும்' என்ற ஆவல் ஏற்படவும் உதவி புரியும்.

இதுவரையில் 6, 7-வது வகுப்பு மாணவர்களுக்குப் பயன்படும் முறையில் ஆங்கில மொழிப் பயிற்சி வானொலி மூலம் அளிக்கப்பட்டு வந்தது இவ்வாண்டு ஆங்கில மொழிப் பயிற்சி 8-ம் வகுப்பு மாணவர்களுக்கும் அளிக்க வானொலி நிலையத்தினர் முன்வந்திருப்பது பாராட்டுதற்குரியது.

ஆங்கில எழுத்துக்களையும் சொற்களையும் எப்படி முறையாக உச்சரிப்பது—ஆங்கில மொழியில் வல்லமை பெறுவது எப்படி—இவை போன்ற பல்வேறு பயிறசித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

ஆங்கில மொழிப் பயிற்சியை மேலும் மேலும் வளப்படுத்திக் கொள்ள விரும்பும் 6, 7, 8-ம் வகுப்பு மாணவர்கள், வானொலியின மூலம ஒலிபரப்பப்படும் இந்த ஆங்கிலக் கல்வி நிகழ்ச்சிகளைப் பயன்படுத்திக்கொள்வது அவர்களுக்கு மிகுந்த நலம் பயக்கும்.

நன்கு கற்றுத் தேர்ந்த வல்லுநர்களைக் கொண்டு தமிழ—ஆங்கிலம்—வரலாறு—அறிவியல்—நிலவியல்—இசை—பொது நலம் போன்ற பாடங்களை, இக்கல்வி ஒலிபரப்புகளின் மூலம சொல்லித் தர ஏற்பாடாகியிருக்கிறது.

இது மட்டும் அல்லாமல், மைக்கேல் பாரடே, மோர்ஸ் பெல், லிஸ்டர், லூயி பாஸ்டர், ரோனல்ட் ரோஸ் போன்ற பெரும் அறிவியல் அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றை நாடகமாக நடத்திக்காட்டத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

பல்வேறு வரலாற்று நிகழ்ச்சிகளை உரையாடல்கள் மூலமும் நடிப்பின் மூலமும் தெளிவாகக் காட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் பற்றிச் சிறந்த புலவர் பெருமக்களைக் கொண்டு சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்தத ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இலக்கியங்கள்பற்றிய குறிப்புக்களை அவ்வப்போது விளக்கிக் காட்டத் திட்டமிட்டிருப்பது தனிச் சிறப்பான முயற்சியாகும்.

பாடங்கள் பயிற்றுவிப்பதைத் தவிர மாணவர்களுக்கு இசைப் பயிற்சி அளிக்க நிகழ்ச்சிகள் வகுத்திருப்பதும் பெருமகிழ்ச்சிக்குரியதாகும்.

பரிசுத் திட்டம்

இந்தக் கல்வி ஆண்டில் வானொலி கல்வி நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து கேட்கும் மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கும்வகையில், பரிசுகள் வழங்க வானொலி நிலையததினர் ஏற்பாடு செய்திருப்பது பாராட்டுதற்குரியதாகும்.

ஆறு வகுப்புகளுக்கும் முறையே ஆறு பரிசுகள் வழங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்தப் பரிசுப் போட்டியில் வானொலி கல்வி நிகழ்ச்சிகளைக் கேட்கும் எல்லா மாணவ—மாணவியரும் கலந்துகொள்ளலாம்.

ஒவ்வொரு நாளும் மாணவர்கள் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்டதற்குப்பிறகு தாம் அறிந்துகொண்டதுபற்றியும், அவற்றால் ஏற்படும் பலன்பற்றியும் குறிப்புக்கள் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும்.

கல்வி ஆண்டின் இறுதியில் ஒவ்வொரு வகுப்பிற்கான நிகழ்ச்சி பற்றிய சில கேள்விகளை வானொலி நிலையத்தார் கல்வி நிகழ்ச்சியின்போது ஒலிபரப்புவார்கள்; மாணவர்கள், தாங்கள் எழுதி வைத்திருக்கும் குறிப்புக்களைக் கொண்டு வானொலி நிலையத்தார் கேட்கும் கேள்விகளுக்கு விடை எழுதி -- விடைத்தாளை அந்தப் பள்ளித் தலைமை ஆசிரியரிடம் கொடுத்துவிட வேண்டும். பள்ளித் தலைமை ஆசிரியர்கள் அவற்றில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து வானொலி நிலையத்தாருக்கு அனுப்பி வைப்பார்கள். வானொலி நிலையத்தார், பரிசு பெறுவதற்கு உரியவர்களை இறுதியாகத் தேர்ந்தெடுப்பார்கள்.

பரிசுபற்றிய விவரங்கள் அவ்வப்போது வானொலியின்மூலம் அறிவிக்கப்படும். இந்தப் பரிசுத் திட்டம், மாணவர்கள் இந்தக் கல்வி நிகழ்சசிகளில் அதிக அக்கறை காட்டவும், கல்வியில் மேலும் ஊக்கம்பெறவும் பெருந்துணையாக அமையும்."

தொழிலாளர் பிராவிடண்டு நிதி

மேலும் 3 நிறுவனங்கட்கு விரிவு

சென்னை ஜூலை 9—

தொழிலாளர் பிராவிடண்டு நிதிச் சட்டம் இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் தமிழ்நாட்டிலும் புதுவை மாநிலததிலும் மேலும் மூன்று நிறுவனங்களுக்கு விரிவாக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டம், இப்போது இந்தப் பகுதியிலுள்ள 5,357 நிறுவனங்களைச் சேர்ந்த 4,88,363 தொழிலாளர்களுக்குப் பயன் தருகிறது.

சென்ற ஏப்ரல் மாதத்தில் பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் இந்த நிதிக்கு அவற்றின் சந்தாக்களாக மொத்தம் ரூ. 1.03 கோடி கிடைத்தது.

வேலையிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்ற மொததம் 2,153 தொழிலாளர்களுக்கு இறுதிக் கணக்குத தீர்ப்பாக மொததம ரூ. 22.30 இலட்சம் வழங்கப்பட்டது.

மரண கால உதவி நிதியிலிருந்து இந்நிதியின் மரணமடைந்த உறுப்பினர்களுடைய வாரிசுதாரர்களுக்கு அதிகப்படி உதவியாக மொத்தம் ரூ 6,000 வழங்கப்பட்டது.

பரிசீலனை மாதத்தில், வீடு கட்டுவதற்கான முன்பணமாக மொததம் ரூ. 97 ஆயிரமும், வைத்திய உதவியாக ரூ. 14 ஆயிரமும் வழங்கப்பட்டன.

ஆயுள் இன்ஷ்யூரன்சு பாலிசிகளுக்குப் பிரிமியம் கட்டுவதற்காக மொத்தம் ரூ. 2 15 இலட்சம் விடுவிக்கபபட்டது.

அந்த மாதத்தில், துணி ஆலைகள் தற்காலமாக மூடப்பட்டதனால் பாதிக்கப்பட்ட மொத்தம 476 உறுப்பினர்களுக்கு மொத்தம் ரூ. 83 ஆயிரம் அளவுக்கு முன்பணம் வழங்கப்பட்டது.

பயன்படுத்துவோர் கூட்டுறவுச் சங்கங்களில் பங்குகள் வாங்குவதற்காக மொத்தம் 38 உறுப்பினர்களுக்கு ரூ 1,000 விடுவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டிலும், புதுவையிலும் மொத்தம் 281 நிறுவனங்கள் தொடர்பாக மொத்தம் ரூ. 1.09 கோடி சந்தா பாக்கி நிற்கிறது. சென்ற ஏப்ரலில் 52 நிறுவனங்களிடமிருந்து ரூ. 2.93 இலட்சம் வசூலிக்கப்பட்டது; ஒரு முதலாளி தொடர்பாக வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் மக்கட் தொகை

ஆண்டுதோறும் 1.3 கோடி உயர்வு

கட்டுப்படுத்துவதற்குக் கிராமந்தோறும் நிலையம்

புதுடில்லி, ஜூலை 10—

இந்த ஆண்டு ஜுன் 10-ந் தேதியோடு முடிந்த ஒரு மாத காலத்தில் கிராமப் பகுதிகளில் 89 குடும்ப நல நிலையங்கள் அமைக்கப்பட்டன முந்திய மாதத்தில் அமைக்கப்பட்ட நிலையங்களின் எண்ணிக்கை 68.

இவற்றுடன், கிராமப் பகுதிகளில் 24 387 குடும்ப நல நிலையங்கள் இயங்கிவருகின்றன.

நகரப் பகுதிகளில் 1,815 குடும்ப நல நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

தவிர, குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமான ஆலோசனை கூறுவதற்காக 8,993 மருத்துவ நிறுவனங்கள் இருக்கின்றன. இவைகள் கருத்தடைச் சாதனங்களையும் விநியோகிக்கின்றன.

தற்போது இந்தியாவின் மக்கட் தொகை 52 கோடி என மதிப்பிடப்பட்டிருக்கிறது மக்கட்தொகை ஆண்டுதோறும் 1.3 கோடி அதிகமாகி வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் 1 3 கோடி மக்களுக்கு வேண்டிய உணவு—உடை—வீட்டு வசதி—கல்வி—வேலைவாய்ப்பு ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்வதென்பது நாட்டில இருக்கும் வசதிகளுக்கு அப்பாற்பட்டதொரு மிகப் பெரிய பணியாகும். எனவே, பிறப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இதை ஒட்டிதான் குடுமபக் கட்டுப்பாடுப் பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிககப்படுகிறது.

புதுவை --- காரைக்காலில்

கண்காணிப்பு நிலையங்கள்

கவர்னர் உத்தரவு

காரைக்கால், ஜூலை 9—

1957-ஆம் ஆண்டு அரிசிப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் புதுவை கவர்னர், புதுவையிலும், காரைக்காலிலும் 12 கண்காணிப்பு நிலையங்கள் ஏற்படுத்துமாறு உத்தரவிட்டிருக்கிறார்.

புதுவை வட்டாரத்தில் கிருஷ்ணபுரம்—முள்ளோடை சாலையிலும; ரயாம்புத்தூர் எல்லை—மதகடிப்பேட்டை எல்லை—கோரிமேடு எல்லை—கனகரெட்டிக்குளம் எல்லையிலும்; காரைக்கால் வட்டாரத்தில அன்னவாசல், நல்லாத்தூர், நந்தலார் ஆற்றுப் பாலம், அமபகரத்தூர், மேலவாஞ்சூர், திட்டச்சேரி ஆகிய எல்லையிலும் இவைகள் ஏற்படும்.

சூரியனுடன் நெருங்கிப் பழக முயற்சி

நெருப்புக் கோளமாய் நெடுந்தொலைவில் சுடர்விட்டுக்கொண்டிருக்கும் சூரியனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அதன் மர்மங்களைப் புரிந்துகொள்ள ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசைச் சேர்ந்த விஞ்ஞானிகள், காட்டின்கன் நகரில் உள்ள விண்வெளி ஆய்வுக் கூடத்தில் ஒரு பிரதிபலிப்புத் தொலைநோக்கியை உருவாக்கியிருக்கிறார்கள்.

37,500 டாலர் செலவில் உருவாகியுள்ள இதேபோன்ற தொலைநோக்கி அமெரிக்காவில் மட்டுந்தான் இருக்கிறது.

இந்தத் தொலைநோக்கியின் துணையுடன் ஜெர்மன் விஞ்ஞானிகள் சூரியனுடன நெருங்கிப் பழகத் தொடங்கிவிடுவார்கள்!

காங்கிரசுத் தலைமையின் நிலையற்றபோக்கு

எதிர்த்துப் போராட

'அதிருப்தி'யாளரின் முடிவு

இலட்சுமணபுரி, ஜூலை 6—

உத்தரப் பிரதேசக் காங்கிரசுக் கட்சிக்குள் ஒற்றுமையை உண்டாக்குவதற்கென மாநில காங்கிரசுத் துணைத் தலைவர் தம்முடைய விலகலைத் திரும்பப் பெற்றுக்கொண்ட இருபத்து நான்கு மணி நேரத்துக்குள், மற்றோர் அதிருப்தியாளரான சிபன்லால் சாக்சேனா,

"மாநில காங்கிரசின் தலைமை நிர்வாகத்தில் ஒரு மாறுதலை உண்டாக்க வேண்டும்"

என்ற தமது பழைய கோரிக்கையை மறுபடியும் முன்வைத்துள்ளார்.

"மாநிலக் காங்கிரசுக் கட்சியில் புரட்சிகரமான கொள்கைகளில் தீவிர மனப்பான்மை கொண்டவர்களும் சோஷலிச மனப்பான்மை கொண்டவர்களும், சாதி வேற்றுமை இல்லாதவர்களும் தலைமை நிர்வாகத்திற்கு வர வேண்டுமென்பதற்காகத் தற்போதைய காங்கிரசின் மேலாதிக்கப் போக்கை எதிர்த்துப் போராடுவதென பல்வேறு மாவட்டங்களையும் சேர்ந்த காங்கிரசு அதிருப்தியாளர்கள் கூடிய கூட்டம் ஒன்றில் முடிவு செய்யப்பட்டுள்ளது"

என்று சிபன்லால் சாக்சேனா, செய்தியாளர்களிடம் பேசும்போது கூறினார்.

காங்கிரசு ஆதரவு பெற்ற

பஞ்சாப் ஆட்சியில்....

மதுவிலக்கை அமுல்படுத்த மாநில அரசு மறுப்பு

பனஜி, ஜூலை 9—

"பஞ்சாப் மாநிலத்தில் மது விலக்கு செயல்படுத்தப்பட மாட்டாது"

என்று, மாநில நிதியமைச்சர் தெரிவித்தார்.

செய்தி நிருபர்களிடம் அவர் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:—

"மதுவிலக்கு செயல்படுத்தப்பட்டால் ரூ. 30 கோடி வருமான இழப்பு ஏற்படும்.

"மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டும் என்று மத்திய அரசு கூறினால், அதனால் ஏற்படக்கூடிய இழுப்பு முழுவதையும் மத்திய அரசுதான் ஈடுசெய்ய வேண்டும்.

"மதுவிலக்கை அமுல்படுத்துவதற்குப் பதில், கௌரவமான முறையில் மது அருந்துவது எப்படி என்பதையும், எவ்வளவு அருந்தவேண்டும் என்பதையும் கற்றுக்கொடுக்க வேண்டும்."

பஞ்சாபில் காங்கிரசு ஆதரவு பெறற அமைச்சரவை இருந்து வருவது தெரிந்ததே!

இயங்கும் இருதயம்-- பார்க்கப் புதிய வழி!

இருதயமும், அதை ஒட்டியுள்ள இரத்த நாளங்களும் செயல்படுவதைப் பார்க்க அமெரிக்காவில் ஒரு புதிய முறையை உருவாக்கியுள்ளனர்.

கதிரியக்கமுள்ள உலோகங்கள் இந்த முறையில் பயன்படுத்தப்படுகின்றன; உடலுக்குள் இருக்கும் உறுப்புக்களையும், இரத்த ஓட்டத்தையும் புகைப் படங்களில் காண வகை செய்கிறது—புதிய முறை!

வழக்கமான 'எக்ஸ்-ரே' முறையில் போலவே டாக்டர்கள் இதிலும் நோய்க்கூறுகளை அறிகின்றனர்; ஆனால், 'எக்ஸ்-ரே முறையிலுள்ள சில குறைபாடுகள் புதிய முறையில் கிடையா.

ரூ.5000 மதிப்புள்ள பள்ளிக்கட்டிடம்

கரம்பக்குடி ஒன்றியத்தில் சீரணியினர் திருப்பணி

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் திறந்துவைத்துப் பாராட்டினர்

கரம்பக்குடி, ஜூலை 9—

திருச்சி மாவட்டம் கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், சீரணித் தொண்டர்கள் வெ டன்விடுதியில் கட்டியுள்ள பள்ளிக் கட்டிடத்தை, கல்வி—தொழில் அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள், ஆலங்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே. வி. சுப்பையா தலைமையில் திறந்துவைத்தார்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் துரை விஜயரெகுனத பல்லவ ராயர் அனைவரையும் வரவேற்றார்.

சீரணி கட்டியுள்ள ரூ. 5 000 மதிப்புள்ள இப்பள்ளிக் கட்டிடத்திற்குத் துணைச் சாதனங்கள் ரூ. 2,700-க்கு அரசினர் உதவியால் வழங்கப்பட்டுள்ளது.

ஒன்றியத்தைச் சேர்ந்த சீரணித் தொண்டர்கள் செய்த பணியினை விளக்கும் 'சீரணியின் திருப்பணி' என்ற வெளியீட்டை, மாவட்ட சீரணித் தலைவர் அன்பில் தர்மலிங்கம் வெளியிட்டு, சீரணியின் தொண்டைப் பாராட்டினர்.

கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியக் குழுவின் சார்பில அமைச்சருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

திரு. அன்பில் தருமலிங்கம் தலைமையில், அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வள்ளுவப பெருந்தகையின் உருவப் படத்தைத் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றினர்.

திரு துரை விஜயரெகுனதப் பல்லவராயர் அனைவரையும் வரவேற்றார்.

ஊராட்சித் தலைவர்கள் அனைவரும அமைச்சருககு மாலை அணிவித்தனர்.

துணைப் பெருந்தலைவர் க. முத்து நன்றி நவின்றார்.

அமைச்சர் அவர்கள் சீரணியினர் சேவை பறறியும் வள்ளுவப் பெருந்தகையின் பெருமை பற்றியும் எடுத்துக் கூறினர்.

அமைச்சர் அவர்கள் மேலும் காந்தி நூற்றாண்டு விழாவும், வள்ளுவப் பெருந்தகையின் 20-வது நூற்றாண்டு விழாவும் 1969-ம் ஆண்டில் சேர்ந்துவருவதால், ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் சிறந்த பணியாற்றி சிறப்பிச்குமாறு சேட்டுக் கொண்டார்கள்.

பின்னர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ. 40 000 மதிப்பீட்டில் கரம்பக்குடியில் கட்டப்படவிருக்கும் திருமண மண்டபத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. வி. சுப்பையா தலைமையில் அமைச்சர் அடிக்கல் நாட்டினர்.

அஞ்சல் அட்டையில் காந்தி உருவம்

ஆலோசனைக் குழு பரிந்துரை

புதுடில்லி, ஜூலை 10—

காந்தி நூற்றாண்டு விழாவின் போது காந்தியடிகளின் உருவப் பொறித்த கார்டுகளை வெளியிட வேண்டுமென்று அஞ்சல் தலை வெளியீட்டு ஆலோசனைக் குழு பரிந்துரை செய்திருக்கிறது.

காந்தி அஞ்சல் தலைக்கான மாதிரி வடிவம் தயாரிப்பது சம்பந்தமாய் நடத்தப்பட்ட போட்டியில் ஏராளமான ஓவியர்கள் கலந்துகொள்ளாததால், மாதிரி வடிவங்களை அனுப்புமாறு மேலும் பலர் ஓவியர்களை கேட்டுக்கொள்ள வேண்டும் என்றும் யோசனை கூறப்பட்டது.

'கட்சி மாறி'களுக்குத் தகுந்த தண்டனை

வழக்கறிஞர்கள் குழு செய்துள்ள பரிந்துரை

புதுடில்லி, ஜூலை 8—

"பணத்திற்காகவோ பதவிக்காகவோ கட்சி மாறும் சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத்தில் தமது பதவிகளைப் பறிகொடுத்தால் மட்டும் போதாது; '6 ஆண்டுகளுக்கு அவர்கள் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படக் கூடாது' என்ற தடையும் விதிக்கப்பட வேண்டும்"

என்று கட்சி மாறுகிறவர்கள் சம்பந்தமான குழுவின் உறுப்பினர்களாக உள்ள வழக்கறிஞர்கள் சிபாரிசு செய்துள்ளதாகத் தெரிகிறது.

பணத்தைக் கருதியோ, அல்லது பதவிக்காகவோ கட்சி மாறுகிறவர்களும் இருக்கலாம்; இது பற்றியும் சட்ட நிபுணர்கள் பரிசீலனை செய்ததாகத் தெரிகிறது; எந்தவிதமான இலாபமும் கருதாமல் கட்சி மாறும் அரசியல்வாதிகள் சட்டமன்றத்தில் தமது இடத்தை இழந்தால் போதும்' என்றும், 'சட்டமன்றத் தேர்தலுக்கு மீண்டும் நிற்கக்கூடாது என்று தடை விதிக்கவேண்டியதில்லை' என்றும் சட்ட நிபுணர்கள் சிபாரிசு செய்துள்ளதாகத் தெரிகிறது.

"அமைச்சரவையின் அளவைக் கட்டுப்படுத்துவதற்குச் சட்டமியற்றலாம்" என்றும் சட்ட நிபுணர்கள் சிபாரிசு செய்துள்ளதாகவும் தெரிகிறது.

காமன்வெல்த் அறக் கட்டளையின் உதவி பெருகுகிறது

காமன்வெல்த் அறக் கட்டளை, இந்த ஆண்டு புதிதாக 65 வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி அளித்துள்ளது. இந்தப் புதிய உதவித் தொகையின் மதிப்பு 2,12,000 பவுன்களாகும்.

காமன்வெல்த் நாடுகளிடையே தொழில்துறை ஒற்றுமையை வளர்க்கப் பாடுபடும் நோக்கத்துடன் 1966-ம் ஆண்டில் இந்த அறக் கட்டளை துவக்கப்பட்டது. இந்த ஆண்டு உதவித் தொகையையும் சேர்த்து மொத்தம் இதுவரை இந்த அறக் கட்டளை, 3,85,000 பவுன்களை காமன்வெல்த் நாடுகளின் தேவைக்காகக் கொடுத்துள்ளது.

உண்மையான சுதந்தரம் எது?

இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதுவரான செஸ்டர் பௌல்ஸ் எழுதியுள்ள சிறப்புக் கட்டுரை ஒன்றில், 'சுதந்தரம்' என்பதற்கான உண்மைப் பொருளை விளக்கியுள்ளார்; அது வருமாறு:—

'சுதந்தரம் என்றால் என்ன' என்பது பற்றியும், அதை அடைவதற்காக என்ன செய்யலாம் என்பது பற்றியும் உலகம் நெடுகிலும் உள்ள நுண்ணறிவுடையோர் மனத்தைக் குழம்பவிடக் கூடாது.

'சுதந்தரம்' என்பது பலமுகம் கொண்ட ஒன்று; சுதந்தரம் பல வகைப்படும்; 'சுதந்தரம் பகுக்க முடியாதது' என்று கூறுவது உண்மை ஆகாது.

முதலாவது—அரசியல் சுதந்தரம் ஒன்று. நமமுடைய பிரதிநிதிகளை—தலைமை அமைச்சரை குடியரசுத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கவும், அரசுக் கொள்கைகளை ஒப்புக்கொள்ளவும், ஒதுக்கித் தள்ளவும் வாக்குச் சாவடிகளுககுச் சென்று வாக்களிக்கும உரிமை இது

குடியுரிமைகள் என்பன வேறு உள்ளன. நம் மனத்தில் உள்ளதைத் தாராளமாகப் பேசவும், அமைதியாகக் கூட்டம் கூடவும், பொதுப் பணிகளை மற்றெல்லோரையும்போலச் சமத்துவமாகப் பெறவும், அவரவர் நாடுகளில் சுதந்தரமாக நடமாடவும், சட்டப்படி நேர்மையான விசாரணை பெறவும், சட்டவிரோதமான சோதனை—பிடிபடல்—நாடு கடத்தப்படல் இவை இல்லாத நிலையில் வாழவும் உள்ள உரிமைகள் குடியுரிமைகள்.

மேலும் தனிப்பட்டோர் சுதந்தரங்கள் என்பன பிற உள. நமது மதத்தின்படி நடக்கவும், நம்முடைய கருத்துப்படி மணம் செய்து இல்லற வாழ்க்கை நடத்தவும் உள்ள சுதந்தரங்கள் இவை.

மனித உரிமைகள் வேறு. இனம் —மதம் — பரம்பரை — பொருளாதார நிலை என்ற வேறுபாடு இன்றி ஒவ்வொருவரும் -- மனித மாண்புககு ஒத்தபடி—தத்தம திறமையின் முழு அளவுக்குச் சுதந்தரமாக வளர்ச்சி அடைவதற்கான உரிமைகள் இவை.

இனி, பொருளாதார உரிமைகள் வேறு உள்ளன. நமக்கு விருப்பமான இடத்தில் வேலை செய்யவும், நமககு வேண்டிய வேலையை அல்லது தொழிலைத் தெரிந்துகொள்ளவும், புதிய பொருள்களைக் கண்டுபிடிக்கவும் விற்பனை செய்யவும், வேலை ஒன்றை ஏற்கவும் விட்டுவிடவும் சொத்து வைத்திருக்கவும் விற்கவும் உள்ள உரிமைகள் இவை. இவை நமக்கு அளிக்கும வாய்ப்புகளுக்கு வரம்பு கட்டுவது வேலை செய்ய நமக்கு எவ்வளவு திறமையும், நுண்ணறிவும் மனமும் உண்டு என்பதேயாகும்.

பெரும்பாலான நாகரிகங்கள் இந்த உரிமைகளில்—சுதந்திரங்களில் சிலவற்றை வழங்கியுள்ளன. நமது காலத்துக்கு முன்பு ஒரு நாகரிகமும், இவற்றை அனைவருக்கும் வழங்குவதாகச் சொல்லிக் கொண்டதுகூடக் கிடையாது. பழைய நாகரிகங்கள் பெரும்பாலும் இந்த உரிமைகள் எல்லாவற்றையும் அல்லது பலவற்றையும் ஒரு சிலருக்கு மட்டும வழங்கியுள்ளன; இச்சிலரே ஆளும் வர்க்கத்தினர்! மற்ற வகுப்பினர் அனைவருக்கும் இந்த உரிமைகள் பெரும்பாலும் மறுக்கப்பட்டன!

இந்த உரிமைகளில் உண்மையாக நடைமுறையில் உள்ளவை எத்தனை என்பது மட்டும் அல்ல—பொது மக்களுக்குக் கிடைப்பவை எத்தனை என்பதும் தான் இன்றைய சனநாயக நாட்டுக்கு உரைகல்லாகும்.

இந்தப் பரந்த பொருளில் சுதந்திரத்தைத் தங்கள் பற்றுகோடாகக் கொண்ட ஒரு நாட்டினரின் இலட்சியம், உலகியல் செல்வத்தில் சமத்துவம் பெறுவது அல்ல; இந்தச் சமத்துவமும் ஏற்படுவது உண்மை; இதுவும் வரவேற்கத்தக்கதே ஆனால உண்மை இலட்சியம் வேறு.

நமது திறமைக்கும் விருப்பத்துக்கும ஏற்ப வாழவும வேலை செய்யவும் முன்னேறவும் அனைவருக்கும் சமத்துவமான வாய்ப்பு —நமக்கும் நம பிள்ளைகளுக்கும் நல்ல கல்வியும் நல்ல உடல்நிலையும் பெறுவதற்கு உரிமை— அடிப்படையான குறைந்தபட்ச பாதுகாப்புப் பெறுவதற்கு உரிமை—நமது தாராள மரபின் அடிப்படையாக உள்ளவையும் மென்மேலும் பெருகிவருபவையுமான அரசியல் உரிமைகள், குடியுரிமைகள் — ஆகிய இவையே உண்மை இலட்சியம்.

இந்தச் சுதந்தரக் கட்டுக்கோப்புக்குள், நம்மில் சற்றுத் துணிவுள்ளவர்கள் நமது காலத்து அடிப்படை உண்மைகளுக்காவது தயங்காமல் பாடுபட வேண்டும். அவை இவை:—

பூமியில் மனிதனுக்கு எதிர் காலம் இல்லாமல் போக வேண்டியது இல்லை என்பது ஒன்று.

'அழிவுதான் வரும்' என நாம் ஓய்ந்துவிட வேண்டியது இல்லை என்பது ஒன்று.

நமது அரசியல் நுண்ணறிவும திறனும், இனியும் நம்மை அழிவினின்று காப்பாற்றக்கூடும என்பது ஒன்று.

போர், அநீதி போன்ற சில என்றும் உள்ளவையாகத் தோன்றினாலும் அவை என்றுமே தீயவை -- அவற்றை என்றுமே எதிர்த்துப் போராட வேண்டும்; அவற்றை ஒரு நாள் அழித்து ஒழிக்கவே வேண்டும் என்பது ஒன்று.

6 கெசட் பதிவு அதிகாரிகட்குத் தண்டனை

இலஞ்ச ஊழல் குற்றத்திற்காகவும், முறைகேடான நடத்தைக்காகவும அரசாங்க அதிகாரிகள், ஊழியர்கள்மீது இலாகா மூல நடவடிக்கைகள் எடுப்பதற்காக 86 வழக்குகளை மத்திய புலன் விசாரணை நிறுவனத்தைச் சேர்ந்த தனிப் போலீசுப் பிரிவு சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்கு இந்த ஆண்டு மே மாதம் அனுப்பிவைத்தது. இந்த வழக்குகளில 11 கெசட் பதிவு அதிகாரிகளும், 97 இதர ஊழியர்களும் சம்பந்தப்பட்டிருக்கின்றனர்.

பரிசீலனை மாதத்தில், 66 வழக்குகளில் சம்பந்தப்பட்டிருந்த ஆறு கெசட் பதிவு அதிகாரிகளுக்கும், 74 இதர அரசாங்க ஊழியர்களுக்கும் இலாகாமூலமாகத் தண்டனை வழங்கப்பட்டது.

காண்டிராக்டர்களின் 'பில்'களைத் துரிதமாக முடிவு செய்வதற்காக அவர்களிடமிருந்து பணம் பெறுவதை வழக்கமாகக் கொண்டிருந்த மூன்று உதவியாளர்கள், உதவியாளர்—டைபிஸ்ட் ஒருவர், பொருளாளர் ஒருவர் ஆகியோர் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர்.

வீட்டை விற்பனை செய்ய அனுமதி கோரியவரின் விண்ணப்பம துரிதமாகக் கவனிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்வதற்காக ரூ. 100 இலஞ்சம வாங்கிய நில -- வளர்ச்சி அதிகாரி அலுவலகத்தைச் சேர்ந்த வரவேற்பாளர் ஒருவர் வேலையிலிருந்து 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டார்,

பிராவிடண்டு நிதியிலிருந்து கடன்பெற உதவி செய்வதற்காக ஒரு ஊழியரிடமிருந்து ரூ. 100 இலஞ்சம் வாங்கியதற்காக 'இந்துஸ்தான் ஏரோனாடிக்' நிறுவனத்தைச் சேர்ந்த 'குரூப் லீடர்' ஒருவர் வேலையிலிருந்து விலக்கப்பட்டார்.

2 கோடி கருத்தடைச் சாதனங்கள்

அமெரிக்காவிலிருந்து வருகை

புதுடில்லி, ஜூலை 10—

கொரியாவிலிருந்து 2 கோடி 'காண்டோம்'கள் பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

வர்த்தக அளவில் இவற்றை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஆறு வர்த்தக நிறுவனங்களின் உதவியுடன், மூன்று 15 காசு என்ற விகிதத்தில் 'காண்டோம்'கள் விற்பனையாகும்.

அரசு மருத்துவமனைகள், மருத்துவ நிலையங்கள் முதலியவை மூலம் இலவசமாக விநியோகிப்பதற்காக நியூயார்க்கிலிருந்து அனுப்பப்பட்ட ரூ. 1.7 கோடிச்கும் அதிகமான 'காண்டோம்'கள் பயன்படுத்தப்படும்.

அமெரிக்க உதவி நிறுவனம், இலவச விநியோகத்திற்காக 2 கோடி 'காண்டோம்'களைத் தர முன்வந்திருக்கிறது. அதன் ஒரு பகுதியே நியூயார்க்கிலிருந்து கிடைத்துள்ள 1.7 கோடி 'காண்டோம்'கள் கப்பல்மூலம் வந்து சேரவிருக்கின்றன.

தாரமங்கலம் வட்டார சீரணி

தாரமங்கலம் வட்டார சீரணித் தொண்டர்களின் கூட்டம் தாரமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடந்தது.

கூட்டத்திற்கு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு எட்வின் தலைமைவகித்தார். சுமார் 20 பேர் வந்திருந்தனர்.

இக்கூட்டத்தில் சீரணி நிர்வாகிகளாகக் கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: டி. சி. அரங்கசாமி (தாரமங்கலம் தி. மு. க செயலாளர்).

துணைத் தலைவர்: பெ. வடிவேலு (தோப்பூர்).

செயலாளர்: பழனியப்பன் (தொளசப்பட்டி).

ஜூலை 17-ல் தொடங்கி மாத இறுதிக்குள் இவர்கள் தோப்பூரில் ஒரு சாலை போட்டு முடிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

தி.ப.தொ.மு. சங்கச் சாதனை

கோவை குமரன் மில்லில், 9 ஆண்டுக் காலமாகப் பணியாற்றி வந்த சின்னச்சாமி என்பவருக்கு, அவருடைய சர்வீசுக்கு உரிய கிராசுடி தரப்படவில்லை.

இதுபற்றித் திராவிடப் பஞ்சாலை தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் 18-4 68 அன்று தொழிலாளர் அதிகாரி முன்னிலையில் வழக்குத் தொடரப்பட்டது; 14-6-68 அன்று தொழிலாளர் அதிகாரி முன்னிலையில் விசாரணை நடைபெற்றது.

"விசாரணையில் சின்னச்சாமிக்கு ரூ. 200 கிராசுடியாகக் கொடுப்பது என்று முடிவாகியது" என்று, தி.ப.தொ.மு. சங்கச் செயலாளர் பி. கருப்புசாமி அறிவிக்கிறார்.

கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் தி.மு.க. வெற்றி

கோவை ஒத்தக்காளி மண்டபத்தில், பிரிமியர் மில் கூட்டுறவுப் பண்டகசாலையின் ஓர் இடத்துக்கு 28—6—68 அன்று தேர்தல் நடைபெற்றது.

ஓர் இடத்துக்கு தி.ப தொ.மு' சங்கமும், ஐ.என்.டி.யு.சி., கம்யூனிஸ்டு ஆகியவையும் போட்டியிட்டன.

தி.ப.தொ மு. சங்கத்தின் சார்பில் போட்டியிட்ட வி. பி. கிருஷ்ணசாமி வெற்றி பெற்றார்.

ஓட்டு விவரம் வருமாறு:—

வி. பி. கிருஷ்ணசாமி (தி.மு.க,) 319; வி. கோவிந்தராசு (கம்.) 119; வி. பாலகிருஷ்ணன் (ஐ.என்.டி.யு.சி.) 173.

திருவரங்குளத்தில் சிறு சேமிப்பு விழா

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 28—6—68 அன்று சிறுசேமிப்பு விழா, பயிற்சி துணைக் கலெக்டர் திரு. பி. ரேணுகோபால் எம்.ஏ.,பி.எஸ்சி. தலைமையில் நடைபெற்றது.

திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரின் தனி உதவியாளர் எஸ். பி. பெருமாள் பி.எஸ்சி., சிறு சேமிப்பின் அவசியத்தையும் பலன்களையும், ஏழை மக்களுக்கு அதனால் ஏற்படும் நன்மைகளைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்து, 'வளரும் சேமிப்பு'த் திட்டத்தில் சேர்க்கப்பட்ட உறுப்பினர்கட்குப் பாஸ் புத்தகங்களை வழங்கினார். அன்று 81 கிராம மக்கள் வளரும் சேமிப்புத் திட்டத்தில் அங்கத்தினர்களாகச் சேர்ந்தார்கள்.

நன்றியறிவிப்பு

தென்காசி இடைத் தேர்தலில் தி. மு. க. வேட்பாளர் கதிரவனை ஆதரித்துப் பணியாற்றிய—வாக்களித்த சலவைத் தொழிலாளர் பெருமக்கள் அனைவருக்கும் தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொதுச்செயலாளர் சி. ஆர். கோலப்பா நன்றி தெரிவித்துக்கொள்கிறார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

11--7--68

சென்னை 2-வது வட்டம்

அறிஞர் அண்ணா அறிவகத் துவக்க விழா; மாலை 7 மணிக்கு இராயபுரம் சூரியநாராயணச் செட்டித் தெரு புதுமனைக்குப்பத்தில்; தலைவர்: வை. சுந்தரமூர்த்தி; பேசுவோர்: டி. கே சீனிவாசன், புலவர் பொன்னிவளவன், மு. வேதாசலம் எம்.எல்.ஏ., த வெங்கடேசன் எம்.சி., சே. அரசு, கே. துரைராசு, சி. இராதாகிருஷ்ணன், கா. தேசிங்கு.

அந்தியூர்

தி. மு. க. சார்பில் தென்காசி வெற்றி விழா; மாலை 7-மணிககு தேரடித் திடலில்; தலைவர்: ஏ பி. சத்தார்; பேசுவோர்: வெ. கண்ணன், ஈ. எம். நடராசன், மற்றும் பலர்.

பட்டுக்கோட்டை

அண்ணா படிப்பகச் சார்பில் மாலை 6-மணிக்கு பழைய தலைமை அஞ்சல் நிலையம் அருகில்; தலைவர்: கே. எஸ். சிவராமகிருட்டினன்; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., என். எஸ். இளங்கோ, ஆர். அடைக்கலம் எஸ். பாப்பையன், ஆர். மாரிமுத்து, இரா. கிருட்டினன், கு அடைக்கலம், சு. ப. மலையப்பன்.

மதுரை

41-வது வட்ட தி.மு.க. சார்பில் தென்காசி வெற்றி விழா; மாலை 7 மணிக்கு கீரத்துறை நல்லமுத்துப்பிள்ளை புதுரோடில்; தலைவர்: எம். முத்துச்சாமி; பேசுவோர்: திருவை அண்ணாமலை, கு. திருப்பதி பி.ஏ.பி.எல்., கடலரசன், எழில் விழியன், ஜோ. தங்கக்கனி.

காரைக்குடி

வள்ளுவர் மன்றத் திறப்பும் தென்காசி வெற்றி விழாவும்; மாலை 7 மணிக்கு காஞ்சி திடலில்; தலைவர்: சித சிதம்பரம்; பேசுவோர்; அமைச்சர் செ. மாதவன்; பேசுவோர்: எஸ். எஸ் தென்னரசு, சி. சேதுராமன் எம்.எல்.ஏ., பெரி. அழகு.

க. அன்பழகன்
சுற்றுப்பயணம்

சூலை 11: ஆத்தூர்—திருமணம், பொதுக்கூட்டம்; 12: பென்னாடம், திருச்சி—பொன்மலை; 13: கோவிந்தகுடி, நெடுந்தெரு; 14: காலை: தஞ்சை — திருமணம்; மாலை: மாந்துறை (லால்குடி); 16: சென்னை.

அரூர் முத்து மகள் திருமணம்

நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர் அரூர் முத்து அவர்களின் மகள் செல்வி: இலங்கணிக்கும் — செல்வன்: சி. பெருமாள் எம்.ஏ. (டெபுடி போலீசு சூப்பிரண்டெண்டு, திருப்பத்தூர்)-க்கும், அரூர் மணமகள் இல்லத்தில் 12—7—68 காலை 9 மணியளவில், தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலும்—தந்தை பெரியார் அவர்கள் முன்னிலையிலும் திருமணம் நடைபெறும்.

மத்திய உள்துறைத் துணை அமைச்சர் திரு. கே. எஸ். இராமசாமி, காயிதே மில்லத் முகம்மது இசுமாயில் சாகிப் எம்.பி., மற்றும் பலரும் வாழ்த்துரை வழங்குவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு வழுதி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

அரூரில் பெரியார் பிறந்தநாள் விழா

அறிஞர் அண்ணா, காயிதே மில்லத் பங்கேற்பு

அரூர் வட்ட—நகர தி. மு. க. சார்பிலும், வட்ட—நகர தி. க. சார்பிலும் பெரியார் பிறந்த நாள் விழா 12-7-68 மாலை 6-30 மணிக்கு பேருந்து நிலையத்திற்கு அருகில் நடைபெறும்.

இந்த விழாவில் பெரியார், அறிஞர் அண்ணா, காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

எச். எல். முருகேசன் தலைமை வகிப்பார்.

மற்றும் அமைச்சர்கள் ஏ. கோவிந்தசாமி, மா. முத்துசாமி, எஸ்ஜே சாதிக்பாட்சா, க. அன்பழகன் எம்.பி., கி. மனோகரன் எம்.பி, அரூர் முத்து எம்.பி., க. இராசாராம் எம்.பி., ம. கமலநாதன் எம்.பி., எம். சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., ம. வே. கரிவேங்கடம், பி. வி. சீராமுலு, கு. மதிவாணன், எச். ஜி. சென்னையன், வி. ஆர். வேங்கன், டி. சி. வேணுகோபால், என். நஞ்சையா, எச். ஆர். வேதகிரி, எச். ஆர் குசலன் பாராட்டு வழங்குவர்.

வ. ஆ. மாவட்டம் கலவை, கலசப்பாக்கம் தி. மு. க. கிளைகளின் மறு தேர்தல்

வ. ஆ. மாவட்டம் கலவை, கலசப்பாக்கம் தி. மு. க. கிளைகளின் மறு தேர்தல், 17-7-68 புதன்கிழமையன்று முறையே காலை 10 மணிக்கும், மாலை 4 மணிக்கும் மாவட்டச் செயலாளர் திரு. இரா. தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

வ. ஆ. மாவட்ட நகரக் கிளைகளின் தேர்தல்

வடார்க்காடு மாவட்டத்தில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்ட கீழ்க்காணும் நகரக் கிளைகளின் தேர்தல், கீழ்க்காணும் நாட்களில் மாவட்டச் செயலாளர் திரு. இரா. தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும் என்று இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

15-7-68

ஆற்காடு: காலை 10 மணி

16-7-68

இராணிப்பேட்டை: காலை 10 மணி

அரக்கோணம்: மாலை 4 மணி

சமுதாயச் சீர்திருத்த-- விவசாய மாநாடுகள்

சூலை 12, 13 (வெள்ளி-சனி)

ஆகிய நாட்களில்

மாயூரம் வட்டம் மணல்மேட்டில்

வெள்ளைச்சாமி பந்தல் -- மாணவர் சாரங்கபாணி அரங்கில்

நடைபெறும்.

★

சமுதாயச் சீர்திருத்த மாநாடு: 12--7--68

தலைவர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ

திறப்பாளர்: வி. மாயவன் எம்.பி.

கொடியேற்றுவர்: எஸ். கணேசன் எம்.எல்.ஏ.

வரவேற்பாளர்: என். கிட்டப்பா எம்.எல்.ஏ.

சொற்பொழிவாளர்கள்:

என். வி. நடராசன் எம்.எல்.சி.	புலவர் கூ. ஆறுமுகம்
தில்லை வில்லாளன் எம்.பி.	க. முருகையன் எம்.எல்.ஏ.
திருவாரூர் கே. தங்கராசு	மா. செங்குட்டுவன்
புலவர் அறிவுடைநம்பி	எஸ். ஆர். இராதா

சிறப்புரை: தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்

திருமதி சத்தியவாணிமுத்து

மணிவண்ணன்—பத்மினி குழுவினர்; முருகு பாண்டியன் குழுவினர் ஆகியோரின் கலைநிகழ்ச்சிகளும், திருவெண்காடு திரு. டி. பி. சுப்பிரமணியம் அவர்களின் நாதசுர இசை நிகழ்ச்சியும் உண்டு.

இரவு—திரு. டி. கல்யாணசுந்தரம் தலைமையில் சொர்ணம் தீட்டிய 'விடைகொடு தாயே' நாடகம் நடைபெறும்.

காலை—9-மணிக்கு பட்டவர்த்தி சந்தைத் தோப்பிலிருந்து மாயூரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. வி. கோவிந்தசாமி தலைமையில் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு மாநாட்டுப் பந்தலை வந்தடையும்.

★

விவசாய மாநாடு: 13-7--68

தலைவர்: வேளாண்மைத்துறை அமைச்சர்

திரு. ஏ. கோவிந்தசாமி

திறப்புரை: மன்னை ப. நாராயணசாமி

வரவேற்பு: என். கிட்டப்பா எம்.எல்.ஏ.

சொற்பொழிவுகள்:

எஸ். இராகவானந்தம் எம்.எல்.சி., காட்டூர் கோபால், கோ. சி. மணி எம்.எல்.சி., ஆ. துரையரசன் எம்.எல்.ஏ., சி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., கா. சுப்ரவேலு எம்.பி., எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி., ந. தர்மலிங்கம் எம்.எல்.ஏ., ந. சோமசுந்தரம் எம்.எல்.ஏ., குளித்தலை முத்துகிருஷ்ணன், சு. தென்கோவன், ம. கோ. மணி, நன்னிலம் நடராசன், யா. சேவியர், திருமதி கிரேசி சேவியர், வடகால் அமிது, இரா. இராசன், கு. அடைக்கலம், பொன். தர்மன்.

சிறப்புரை: பொதுப்பணித்துறை அமைச்சர்

திரு. மு. கருணாநிதி

சிவகங்கை சேதுராசன் குழுவினரின் பலகுரல் கலைநிகழ்ச்சியும்; இசைமுரசு நாகூர் அனிபா குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும் உண்டு.

இரவு 10-மணிக்கு — எம். கிருஷ்ணமூர்த்தி எம். எல். ஏ. தலைமையில் திரு. மு. கருணாநிதி அவர்கள் தீட்டிய 'காகிதப் பூ' நாடகம் நடைபெறும்.

விவசாயத் தொழிலாளர் பெருங்குடி மக்களே திரண்டு வாரீர்!

—உழவர் முன்னேற்ற சங்கம், மணல்மேடு வட்டாரம், மாயூரம்

ஜி. டி. நாயுடுவின் மற்றொரு கண்டுபிடிப்பு

தண்ணீர்த்தட்டுப்பாடு--சமாளிக்க புது ஏற்பாடு

கோயமுத்தூர் சூலை 9—

கோவை நகரிலும், போத்தனூரிலும் விஞ்ஞான மேதை ஜி. டி. நாயுடு அவர்கள், தம்முடைய அரிய கண்டுபிடிப்பால், நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு இலவசமாகத் தண்ணீர் வழங்குகிறார்!

பாறைப் பகுதியான கோவையில் கிணறு தோண்ட அதிகச் செலவு ஆவது மட்டுமல்ல—அதிக ஆழமாகத் தோண்டினால்தான் தண்ணீர் கிடைக்கும்.

ஆனால் ஜி. டி. நாயுடு அவர்கள், தம்முடைய விஞ்ஞான அறிவு நுட்பத்தால், எளிதாகத் தண்ணீர் கிடைக்கும் இடங்களைக் கண்டுபிடித்து—அங்கு அதிக விசையுள்ள பம்பு செட்டுகளைப் பொருத்தி பூமிக்கடியிலிருந்து ஊற்று நீர் எடுத்து—தண்ணீர் தட்டுப்பாட்டால் அவதியுறும் மக்களுக்கு இலவசமாக வழங்குகிறார்.

ஜுன் திங்கள் மத்திவரையில் தினம் 2 இலட்சத்து 32 ஆயிரம் காலன் தண்ணீர் வழங்கப்பட்டு வந்தது; இப்போது 1 இலட்சத்து 70 ஆயிரம் காலன் தண்ணீர் கோவையிலும், போத்தனூரிலும் சேர்ந்து வழங்கப்படுகிறது.

கோவை அவனாசி ரோடில் ஜி. டி. நாயுடு அமைத்துள்ள இந்த நீர் வழங்குத் திட்டத்தை, குடியரசுத் துணைத்தலைவர் வி. வி கிரியும், மத்திய துணை அமைச்சர் பி. எஸ் மூர்த்தியும் பார்வையிட்டு, அவருடைய விஞ்ஞான அறிவைப் பாராட்டினர்.

காட்டுப் பகுதியில் தங்கம் கண்டெடுப்பு

வேலூர், சூலை 10—

செங்கம் அருகில காட்டுப் பகுதியில் ரூ. 12 000 பெறுமானமுள்ள தங்கம் ஒரு குழியில் கிடந்ததை ஆடு மேய்த்துக் கொண்டிருந்த ஒருவர் கண்டுபிடித்தார்.

அந்தத் தங்கம் அங்கே எப்படி வந்தது என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்தத் தங்கம் இப்போது தாலுகா அலுவலக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது

போலிப் பங்குப் பத்திரங்கள்

ரூ. 2 இலட்சம்வரை விற்று மோசடி செய்த மூவர்

புதுடில்லி, சூலை 10—

'இந்துஸ்தான் மோட்டார் நிறுவனத்தின் பங்குகள்' என்று கூறிக் கொண்டு நாட்டின் பல பகுதிகளிலும் போலிப் பத்திரங்களை விற்பனை செய்து பொதுமக்களை ஏமாற்றிய குற்றத்திற்காக நான்கு பேர்கள்மீது மத்திய புலன் விசாரணைப் பிரிவு வழக்குப் பதிவு செய்திருக்கிறது.

பல்வேறு பாங்கிகளும், பம்பாய்—கல்கத்தா—கான்பூர்—டில்லி ஆகிய இடங்களில் உள்ள பங்குத்தரர்களும் கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் ரூபாய்க்கு இவர்களிடமிருந்து கள்ள பங்குப் பத்திரங்களை வாங்கி ஏமாற நேர்ந்தது.

ஏராளமான பங்குதாரர்களின் 'டிவிடெண்டு' பணத்தையும் இவர்கள் பெற்றுக்கொண்டிருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

ஜி. பரங்குசத்துக்குப் பாராட்டு

பேராசிரியர் க. அன்பழகன் பொன்னாடை போர்த்துவார்

தமிழகச் சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இரயில்வே தொழிற்சங்கத் தலைவர் ஜி. பரங்குசம் அவர்களுக்கு, பொன்மலை இரயில்வே படிப்பகச் சார்பில், 12—7—68 மாலை 5-30 மணிக்கு திரு. ச. கண்ணையன் தலைமையில் பாராட்டு -- பொன்னாடை போர்த்தும் விழா நடைபெறும். பேராசிரியர் க. அன்பழகன் எம்.பி. பொன்னாடை போர்த்துவார்; தோழர்கள் வி. மாயவன் எம்.பி., அன்பில் தர்மலிங்கம், ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., முத்துசெல்வன் எம்.எல்.ஏ., கூ.மு. பெரியசாமி, கே. கலாவதி, இர. முருகையன் ஆகியோர் பாராட்டிப் பேசுவர்.